# போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

ஒழுக்கமே அறிவு ★ உழைப்பு திறமை

நேசமாதா

Venkatachalam S. 1941-43.

Editor & Publisher ... A. Lourduswami, B.A., L.T. R... Training School, Trichinopoly.


359
2 MAR 1944
359
3L.
க211, N11PP
N44.348.
189990.


... பெப்ருவரி **1944** மலர் **8**

...முறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 2.

# போதனா விஷய பூங்கொத்து

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்புகள் ... ... | 121 |
| 2. | சென்னை கல்வி இலாகா ... ... ... | 123 |
| 3. | யாப்பியல் ... ... ... ... | 125 |
| 4. | "ஒய்வுநேரப் பொழுதுபோக்கு" ... ... | 126 |
| 5. | சிறுவர்களுக்கு எண் போதனை ... ... | 127 |
| 6. | விடுகவிகள்—இது என்ன? ... ... ... | 129 |
| 7. | சிறு கதை ... ... ... ... | 130 |
| 8. | ஜீவராசிகளின் பாஷைகள் ... ... ... | 131 |
| 9. | பெருந்தகை பாபர் ... ... ... | 132 |
| 10. | தேனீ வளர்த்தல் ... ... ... | 135 |
| 11. | பாடசாலை நிகழ்ச்சிகள் ... ... ... | 136 |
| 12. | உல்லாசப் பிரயாணம் ... ... ... | 136 |
| 13. | பெற்றோர் சங்கங்கள் ... ... ... | 138 |
| 14. | யுத்த முயற்சி ... ... ... ... | 139 |
| 15. | யோசனைக்கணக்கு விடை ... ... ... | 140 |


---

## Rates of Advertisement

| PERIOD | HALF PAGE | | | FULL PAGE | | |
|---|---|---|---|---|---|---|
| | Rs. | As. | Ps. | Rs. | As. | Ps. |
| 1 Month ... ... | 4 | 0 | 0 | 7 | 8 | 0 |
| 3 Months ... ... | 11 | 0 | 0 | 20 | 0 | 0 |
| 6 Months ... ... | 20 | 0 | 0 | 35 | 0 | 0 |
| 1 Year (11 Issues) ... | 30 | 0 | 0 | 55 | 0 | 0 |

# போதனை விஷயப் பூங்கொத்து

கொத்து 34] 15 பெப்ருவரி 1944 [மலர் 8

## பத்திராதிபர் குறிப்புகள்

**T. S. L. C.** பரீட்சை **1944.** அடுத்த மார்ச்சு-மீ 13-ம் உ திங்கள்கிழமையன்று தொடங்கி நடைபெறும். விவரம் மற்றோரிடத்திற் காண்க. VIII-ம் வகுப்பு முடிவுப் பரீட்சை கால அட்டவணையையும் காண்க.

வழக்கம்போல் **நம் பாடசாலை ஸெண்டரில்** (centre) ஸெக்கண்டரி கிரேடு, எலிமெண்டரி கிரேடு மாணவர்கள் இங்கு ஷ பரீட்சை எழுதுவார்கள்.

பரீட்சையில் தவறிப்போன நம் பழைய மாணவர்கள் **வேறு ஸெண்டரில்** பரீட்சை எழுதுவதாயிருந்தால், இங்கு நம் பாடசாலையில் படித்துப் பயின்றதாக இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் (Identification Certificate) பெற்றுக்கொள்ளக்கடவர். அதற்கு, தபால் சார்ஜுக்கு $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு உடனே அனுப்பி ஷ அத்தாட்சிப் பத்திரத்தை நம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதை மறந்துவிடவேண்டாம்.

* * *

**பழையமாணவர்தினக் கொண்டாட்டம்:**—இஃது அடுத்த மார்ச்சு-மீ 1-ம் தேதி புதன்கிழமை மாலையில் கொண்டாடப்படும். இவ்வைபவத்தைச் சிறப்பித்துக் களிக்குமாறு நம் பழைய மாணவர்களனைவரையும் இதன்மூலம் அழைக்கின்றோம். அனைவரும் விஜயம் செய்து தாயின் அன்புக்கும் அபிமானத்துக்கும் உரிமையாளராவர் என நம்புகிறோம்.

* * *

**அறிக்கை: பழையமாணவர்தினம்—சங்கீதப்போட்டி.** சென்ற பழையமாணவர் வருடாந்திரக் கொண்டாட்டத்தின் போது, ஸ்ரீ K. V. பழனிசாமி (El. Gr.) என்பவர், 1944-ம் வருடத்திய ஷை கொண்டாட்டத் தினத்தன்று நடைபெறும் வாய்ப்பாட்டுப் போட்டியில் (Open to old and New boys) முதல்தரமாக விளங்குபவருக்கு ஒரு **வெள்ளிப்பதக்கம்** அளிப்பதாகவும், ஸ்ரீ K. A. அருளப்பன் (El. Gr.) என்பவர் ஷை போட்டியில் இரண்டாவதாக விளங்குபவருக்கும் ஒரு வெள்ளிப் பதக்கம் அளிப்பதாகவும் வாக்களித்துள்ளார்கள்.

ஆகவே, இவ்வருடம் 1–3–'44-ல் நடைபெறும் ஷை கொண்டாட்டத்தன்று மாலை 6 மணிக்கு ஷை வாய்ப்பாட்டுப் போட்டி நடைபெறும். அதில் கலந்துகொள்ள விரும்பும் புது மாணவர்களும் பழைய மாணவர்களும் இம்மாதம் 25-ம் தேதிக்குள் (25–2–1944) தத்தம் பெயரை நமக்குத் தெரியப்படுத்திவிட வேண்டும். ஆனால் அதில் ஏற்கனவே பதக்கப்பரிசுகள் பெற்றுள்ள நம் பழைய மாணவர்கள் ஷை **போட்டியில்** கலந்துகொள்ளக்கூடாது. பாடப்போகும் ஒவ்வொருவருக்கும் மூன்று நிமிஷ நேரந்தான் அளிக்கப்படும்.

**தலைமை ஆசிரியர்,**

R. C. Secondary Training School, Trichinopoly.

சென்னை கல்வி இலாகா

[Fort St. George Gazette, Part I-B. dated 18th Jan. 1944]

# Training School Leaving Certificate Examination
# March 1944

DAYS AND HOURS (Indian Standard Time) — **TIME TABLE**

**Elementary Higher**—(*Old Scheme*)

Monday, 13th March—
- 10 A. M. to 1 P. M. ... First Language
- 2 P. M. to 4 P. M. ... Geography

189990

Tuesday, 14th March—
- 10 A. M. to 1 P. M. ... Elementary Mathematics
- 2 P. M. 4 P. M. ... Nature Study

Wednesday, 15th March—
- 10 A. M. to 12 NOON ... Elementary Sociology
- 2 P. M. to 4 P. M. ... History of India, English
- 2 P. M. to 3-30 P. M. ... Indian Music*

**Secondary Grade**—(*Revised Scheme*)

Monday, 13th March—
- 10 A. M. to 12 NOON ... Education I
- 2 P. M. to 4 P. M. ... Education II

Tuesday, 14th March—
- 10 A. M. to 1 P. M. ... Special Methods I
- 2 P. M. to 4-30 P. M. ... English Methods (Texts)

Wednesday, 15th March—
- 10 A. M. to 1 P. M. ... Special Methods II
- 2 P. M. to 4-30 P. M. ... Tamil Methods and Texts

**Elementary Grade**—(*Revised Scheme*)

Monday, 13th March—
- 10 A. M. to 12 NOON ... Child Nature and Education
- 2 P. M. to 4 P. M. ... School Administration

Tuesday, 14th March—
- 10 A.M. to 12-30 P.M. ... Language Methods (Texts)
- 2 P. M. to 4 P. M. ... Elementary Mathematics Methods

Wednesday, 15th March—
- 10 A. M. to 12 NOON ... Nature Study Methods
- 2 P. M. to 4 P. M. ... Indian History Methods

Thursday, 16th March—
- 10 A. M. to 12 NOON ... Geography Methods
- 2 P. M. to 4 P. M. ... Rural Social Problems

---

* Arrangements made for the practical Examination in Indian Music will be notified in due course.

Private candidates and ex-students will produce before the Chief Superintendents of the examination of the centre mentioned in their applications an identification certificate from the Deputy Inspector of Schools or the Sub-Assistant Inspectress of Girls' Schools concerned, in whose jurisdiction the teacher is employed or resides, or from Heads of Training Institutions in which they underwent training. *If any one fails to produce the above identification certificate, he or she will not be allowed to appear for the examination.*

[Fort St. George Gazette, Part I-B Page 86 dated 8-2-'44]

## Public Examination at the end of VIII Standard in Higher Elementary Schools, April 1944

**TIME TABLE**

The Examination will be conducted in the order of time and subject shown in the subjoined table :—

| Days and hours | | Subject |
|---|---|---|
| 1944, Monday, 3rd April | | |
| 10 A. M. to 12 NOON | ... | Language (one of the following six languages. Tamil, Telugu, Malayalam, Kannada, Urdu, and Oriya). |
| 2 P. M. to 4 P. M. | ... | History and Geography including Civics. |
| Tuesday, 4th April | | |
| 10 A. M. to 12 NOON | ... | Elementary Mathematics. |

**Instructions**

The centre at which the pupils of a schools have to appear may be ascertained from the head of the school concerned.

As regards the private candidates, they will have to appear at the centre entered in the hall tickets issued by the Secretary to the Commissioner for Govt. Exams.

A copy of the nominal list will be posted at the entrance to the examination hall a day or two before the examination, and candidates will find their register numbers in the list.

Candidates whose names are not in the printed list furnished to the Superintendents must submit a written declaration through the Superintendents giving full particulars in regard to themselves including their address, and furnish such evidence as may be possible of their having applied for admission to the examination at the proper time and paid the prescribed fees.

Private candidates who come out successful in the examination will have to apply for their certificates to the Deputy Inspector of Schools or the Sub Assistant Inspectress concerned some time in June 1944 furnishing their full address. Their certificates will not be supplied to them direct.

(For full particulars see the Gazette).

# யாப்பியல்

## (M. A. S. Udaiyar, Tamil Pandit)

**உரிச்சீர் :**—உரிச்சீராவது மும்மூன்று அசைகள் சேர்ந்து வருத லாலாகிய சீர்கள் எட்டுமாம். அவை சேருமிடத்து, நேர் நேர் நேர், நிரை நேர் நேர், நிரை நிரை நேர், நேர் நிரை நேர் ஆகவும் நேர் நேர் நிரை, நிரை நேர் நிரை, நிரை நிரை நிரை, நேர் நிரை நிரை ஆகவும் சேரும். அவற்றுள் முதனான்கு சீர்களையும், காய்ச்சீர் என வும் பின்னான்கு சீர்களையும் கனிச்சீர் என்றும் கூறுவர். (உ-ம்.)

“ காலை எழுந்திருத்தல் காணாமை லேபுணர்தல்
மாலைக் குளித்து மனைபுகுதல்—ஏலவே
உற்றாரோ டுண்டல் உறவாடல் இவ்வாறுங்
கற்றாயோ காக்கைக் குணம்.” இச்செய்யுளுள் காணாமை

என மூன்று நேரசையும், உறவாடல் என ஒரு நிரையசையும் இரு நேரசையும், எழுந்திருத்தல் என இரு நிரையசையும் ஒரு நேரசையும், லேபுணர்தல் என ஒரு நேரசையும், ஒரு நிரையசையும், ஒரு நேரசை யும் சீராய் வந்தவாறு காண்க. இவை வெற்சீர் என்ற பெயரையும் பெறுவன.

பூந்தாமரைப் போதலமறத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவையின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பலை மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்
மகிழ மகிழ் தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே.

இக்குறளடி வஞ்சிப்பாவினுள் பூந்தாமரை என இரு நேரசையும் ஒரு நிரையசையும், வினைக்கம்பலை என ஒரு நிரையசையும் ஒரு நேரசையும் ஒரு நிரையசையும் வளவயலிடை என மூன்று நிரை யசையும், மீன்றிரிதரும் என ஒரு நேரசையும் இரு நிரையசையும் சீராயினவாறு காண்க. இவை வஞ்சிச்சீர் என்ற பெயரையும் பெறு வன. இவற்றிற்கு முறையே : “ நேர் நேர் நேர் தேமாங்காய் என வும் நிரை நேர் நேர் புளிமாங்காய் எனவும், நிரை நிரை நேர் கருவிளங்காய் எனவும், நேர் நிரை நேர் கூவிளங்காய் எனவும், நேர் நேர் நிரை தேமாங்கனி எனவும், நிரை நேர் நிரை, புளிமாங்கனி எனவும், நிரை நிரை நிரை, கருவிளங்கனி எனவும், நேர் நிரை நிரை, கூவிளங்கனி ” எனவும் உதாரண வாய்பாடுகள் கூறப்படும்.

# “ஓய்வுநேரப் பொழுதுபோக்கு”

(M. Henry Samuel, R. S. A. School, Andimadam.)

சனி; ஞாயிறு; மற்றும் அநேக விடுமுறை நாட்கள் வருகின்றன. அந்நாட்களில் நேரம் போவது சிலருக்குக் கஷ்டமாக இருக்கிறது. அந்த ஓய்வு நேரங்கள் போவதற்காக (பொழுது போக்கிற்காக) நாம் என்ன செய்கிறோம்? சிலர், ‘நேரம் போகவே மாட்டேன் என்கிறதே’ என்று பகலில் 4 மணி நேரம் தூங்குகின்றனர். இதைத் தவிர வேறு விதமாகப் பொழுதுபோக்க முடியாதோ?

**வேலை விஷயம்:**—பாடசாலைக்குப் பிள்ளைகளைச் சேர்க்க ஊர் சுற்றுவது; மாதிரிப் பாடங்களை ஆசிரியர் சங்கத்தில் நடத்த ஆயத்தப்படுத்துவது; பாடக்குறிப்பு எழுதுவது; பெற்றோர்களைச் சந்தித்து பிள்ளைகளைப்பற்றிப் பேசுவது முதலியவைகள் ஆசிரியர் தம் தொழிலைப் பொருத்தமட்டில் செய்வது ஆகும். இதில் சுலபமாக நேரம் போகும்.

**விளையாட்டு:**—கொஞ்ச நேரம் கிராமத்திலுள்ள வாலிபர்களோடு விளையாடலாம். நான் இருப்பதைப்போன்ற ஊரில் என்ன செய்வது? வாலிபர்களுக்குப் பஞ்சமில்லை; ஆனால் குணம்! இதற்குப் பதில் வீட்டில் சோழி; ஆடும் புலியும் போன்றவைகளை விளையாடலாம். இதற்கும் ஆட்கள் இல்லாவிடில் “கற்பனை” என்னும் ஓய்வுநேரப் பொழுதுபோக்கைக் கையாளலாம்.

**கற்பனை:**—வீட்டில் சும்மா உட்கார்ந்து இருக்கையில் ஏதோ ஒரு விஷயத்தைக் கற்பனை பண்ணலாம். தனது பாடசாலையை இன்னும் எப்படி முன்னுக்கு கொண்டுவருவது, வேறு என்ன நல்ல கதைகளை எழுதலாம்; என்றெல்லாம் கற்பனைகள் பண்ணலாம். கற்பனையிலே கூட ஏன் தரித்திரமாக பிச்சை எடுக்கும் நிலைமை ஏற்பட்டால் என்ன செய்வது?” என நினைக்கவேண்டும். சும்மா 10 ரூபாய் கிடைப்பது போலவும், அதை எப்படி நல்வழியில் செலவு செய்வதுபோலவுமே கற்பனை பண்ணலாம். கற்பனைக்குக்கூடவா பஞ்சம்? “எண்ணிய படியே எதுவும் நடக்காது. எதுவும் அவன் செயல்; மனப்பால் குடிக்காதே” என்னும் பாட்டை நீங்கள் நினைக்கலாம். நாம் என்ன மனப்பால் குடிக்கிறோம்? நேரம் போக்கத்தானே கற்பனை செய்கிறோம். செய்யும் கற்பனைமட்டும் நல்லதாகவிருக்கட்டும்.

**திரட்டுதல்:**—ஸ்டாம்புகள்; நெருப்புப்பெட்டி படங்கள்; பல பிரமுகர்களின் படங்கள்; ஜீவிய சரித்திரங்கள்; கதை புஸ்தகங்கள்; இவைகளை ஓய்வு நேரத்தில் சேகரிக்கலாம். சேர்த்த பின்னும் ஓய்வு நேரத்தில் இவைகளைப் பார்க்க மகிழ்ச்சியாயிருக்கும். நான் 310 நெருப்புப்பெட்டிப் படங்கள் வைத்திருக்கிறேன். அவைகளை எடுத்துப் பார்ப்பதில் ஓர் அலாதி இன்பம். இன்னும் 50 கலியாண அழைப்பிதழ்கள் வைத்திருக்கிறேன்.—(என் கலியாணத்திற்கு மாதிரிக்காக

சேர்க்கவில்லே. இதுவும் ஒய்வுநேரப் பொழுதுபோக்கில் ஒன்று) இவ்வாறு திரட்டுதல் எவ்வளவோ ஆசையை உண்டாக்கும். ஆனால் அந்தத் திரட்டூக்கம் உள்ளவர்களுக்கே அது பயன்படும்.

**வரங்களே உபயோகித்தல் :—** அநேகருக்கு கதைகளும், கட்டுரைகளும் எழுத வரங்கள் இருக்கும். அதை அவர்கள் உபயோகிப்பதில்லே. பத்திரிகையாசிரியர்களும் அவர்களுக்கு முயற்சியைத் தூண்டுவதில்லே. அதனால் அவ்வரம் அப்படியே நசித்துப் போய்விடுகிறது. சிலருக்குப் பாட்டு கட்ட வரம் இருக்கும். சிலருக்கு நல்ல சித்திரம் வரைவதில் திறமை இருக்கும். அதையெல்லாம் அவர்கள் உபயோகித்தால் "இறைக்க ஊறும் மணற் கேணி" என்பதைப் போல் அவ்வரங்கள் வளர்ந்து சித்திபெறும். ஒய்வு நேரங்களில் இதை பாட்டு, சித்திரங்கள் முதலியவைகளே எழுதி, கல்வி சம்பந்தமாயின் 'கல்வி' 'போதனு விஷய பூங்கொத்து' 'சிறுவர் அறிவுக்கதிர்' 'பாலர் கல்வி' 'வித்யாதனம்' போன்ற பத்திரிகைகளுக்கு அனுப்பலாம். வெற்றி பெற்ருல் பெறுவது. இல்லேயேல் நாமே அவற்றைப் படித்து இன்புறுவது. வேறென்னதான் செய்யமுடியும்?

**வாசித்தல் :—** கதை வாசித்தல்; பாட்டுப்பாடுதல் முதலியவை மனதிற்கு அதிக இன்பத்தைத் தருகிறது. கதை வாசிப்பதிலும், அதை மற்றவர்களுக்குச் சொல்லுவதிலும் நேரம் அதிசீக்கிரமாய் போய்விடும்.

அடடா! மணி 5 ஆகிவிட்டதே!! ஒரு மணிக்கு 'ஒய்வு நேரப் பொழுது' போக்கு என்னும் விஷயத்தை மனதில் உருவகம் செய்ய ஆரம்பித்தேன். 3 மணிக்கு எழுத உட்கார்ந்தேன். 5 மணிக்கு விஷயத்தை முடித்தேன். எனக்கு இந்த ஞாயிற்றுக்கிழமை இதுதான் பொழுதுபோக்காய் அமைந்தது. உங்களுக்கு இதை வாசிப்பதும் ஒரு பொழுது போக்குத்தான். வேலே செய்துகொண்டா வாசிக்கிறீர்கள்? இல்லேயல்லவா? எப்படி இந்த ஒய்வு நேரப் பொழுதுபோக்கு?

---

## சிறுவர்களுக்கு எண் போதனே

(D. Maria Susaimanikkam)

கணிதத்தில் முதலில் பிள்ளேகளுக்குக் கற்பிக்கவேண்டுவது எண்ணுதல். பிள்ளே எண்ணத் தெரிந்துகொள்ளும்வரை ஒழுங்கான கணிதபாடம் நடத்தமுடியாது; எந்தப் பிள்ளே எண்ணுவதில் அதிக உற்சாகம் காட்டுகிறதோ அந்தப் பிள்ளே கணக்குப் பாடத்தில் கெட்டிக்காரனுயிருப்பான் என்பது கொள்கை. எண்ணறிவு ஏற்படுத்த பொருள்கள் இன்றியமையாதன. எண்களேப் பொருள்களே எண்ணுவதன்மூலம் போதிக்கவேண்டும். வஸ்துக்களே எண்ணி எண்ணி எண்

ணறிவு பெறவேண்டும். வஸ்துக்களை எண்ணி எத்தனை என்றறிவ தற்கு முதலில் வஸ்துக்களின் பெயர்கள் வரிசைக்கிரமமாகத் தெரிய வேண்டும். பிறகு, ஓர் எண் எத்தனை வஸ்துக்களைக் குறிக்கின்ற தெனவும் தெரியவேண்டும்.

ஆகவே, எண்களின் பெயர்களை வரிசைக்கிரமமாகச் சொல்லப் பழக்கிவிட்டு, பிறகு வஸ்துக்களை எண்ணிக் கணக்கிட்டு 'எத்தனை?' என்பதைத் தெரியச்செய்யவேண்டும். பொருளை எண்ணும்போதே எண்ணின் பெயரை உச்சரிக்கவேண்டும்; இவ்விதம் செய்யாவிடின் பொருளுக்கும் எண்ணுக்குமுள்ள தொடர்புக்குப் பதில் பெரும் குழப் பமே காணும்படியாகும். ஏனெனில் ஆரம்பத்தில் பொருள் சம்மந்த மற்ற தனி எண்ணே கிடையாது; தனியாய் எண்ணுக்கு அர்த்தமும் கிடையாது.

நான் நான்கு கொண்டுவந்தேன் என்றால் நீங்கள் காணும் பொருள் யாது? நான் நான்கு பந்துகள் கொண்டுவந்தேன் என்று கூறுமிடத்து வாக்கியத்தின் விஷயம் தெளிவாகிறதல்லவா. ஆகை யால்தான் பொருள்களை எண்ணும்போதே எண்பெயர்களையும் சொல்ல வேண்டியதவசியமாகிறது. (ஒரு கோழி, ஒரு பந்து, மற்றதும்) மேலும் பாலர்கள் தங்களுக்கு இயற்கையாக எண்ணுவதிலுள்ள உற்சாகத்தில் பொருள்களைச் சரியாய்க் கவனியாது 2 பொருள்களை இரண்டு என்று எண்ணுவதற்குப் பதில் மூன்று என்று எண்ணுவார் கள். பாலர்களை எண்ணச்சொன்னால் அவர்கள் 4 விரல்களை எண்ணி 5 என்பதும் 5 என்று சொல்லும்போது விரல்களைக் கவனியாது எண் பெயர்களை மட்டும் அவசரமாய்ச் சொல்லிவிட்டு நம்மிடத்தில் 3 விரல் களைக் காட்டுவதும் நாம் ஆரம்பத்தில் பாலரிடம் காணும் காட்சிக ளன்றோ. ஆகவே, எண்களின் பெயர்களை வரிசைக்கிரமமாகச் சொல் லப் பழக்கிவிட்டு பிறகு வஸ்துக்களை எண்ணிக் கணக்கிட்டு 'எத்தனை'? என்பதைத் தெரியச்செய்வதுதான் சரியான முறை; பிள்ளைகளும் எண்ணின் அர்த்தத்தை நன்கு கண்டுகொள்ள ஏற்ற வழி.

அப்படியானால் நாம் எதுவரையில் எண்களின் பெயர்களை எண் ணக் கற்பிப்பது? நமது எண்மானம் எண்குறிப்பும் தசாம்ச ஒழுங் கில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றுமுதல் 10 வரையுள்ள எண் களின் பெயர்கள் தெரிந்துவிட்டால், அதற்குமேலுள்ள எண்களின் பெயர்கள் இவை சேர்ந்து உண்டாவதால் கற்கச் சுலபமாகும். ஆன படியால் பிள்ளைகள் 1 முதல் 10 வரை வரிசையாகச் சொல்லப் பழக்கவேண்டும். 10 வரை கற்பிக்க முன்கூறியபடி முறைகளை அநு சரிக்கவேண்டும்.

பத்துவரையுள் எண்களின் அர்த்தத்தைக் கற்பித்தபிறகு அவற் றைக் குறிக்கும் இலக்கங்களைக் கற்பிக்கலாம். ஒவ்வொரு இலக்கத் தின் பெயரும் அர்த்தமும் பிள்ளைகளுக்குத் தெளிவாய்த் தெரிய வேண்டும். 6 என்பது ஆறு என்ற எண்ணைக் காட்டுகிறதென்றும்,

ஆறு வஸ்துக்களைக் குறிக்கிறதென்றும் தெரியவேண்டும். இவ்வறிவு பிள்ளைகளிடம் நன்கு ஏற்பட ஒன்றுமுதல் பத்துவரையிலுள்ள எண்களுக்கு இலக்கம், அர்த்தம், பெயர் இவற்றைக் காட்டும் எண் அட்டைகள், எண் சார்ட்டுகள், பொருத்து அட்டைகள் இவற்றை வரைந்து வகுப்பில் தொங்கவிடலாம்.

இதன்பின் 10-க்குள் உள்ள எண்களின் கருத்துக்கள் நான்கையும் விளக்கவேண்டும். 8 என்ற எண்ணை எடுத்துக்கொண்டால் 8 என்பது எட்டுப் பொருள்களைக் குறிக்கிறது. இது கூட்டக் கருத்தாகும் (பொருள்.) 8 என்ற எண், எண்வரிசையில் 7-க்குப்பிறகும் 9-க்கு முன்னும் வருகிறது என்பது வரிசைக்கருத்து; எட்டாவது என்பதும் அப்படியே. 8 என்ற எண் 8 ஒன்றுகளால் ஆனது $\frac{8}{1}$ என்பது விகிதம் சம்பந்தக்கருத்தாகும். நான்காவதான இனக்கருத்தென்பது 2, 4 இவை எட்டின் இனம் ஆகவே இது எட்டின் இனக்கருத்தாகும்.

இவ்வாறு ஒவ்வொரு எண்ணுக 10-வரை கற்பதற்கு சிறிதுகாலம் பிடிக்கும். இது அடிப்படையான அறிவாதலால் இவ்வறிவு பிள்ளைகளிடம் நல்ல முறையில் ஏற்படவேண்டும். ஆகையால் அவசரப்படாமல் போதுமான சந்தர்ப்பங்களும் பயிற்சிக்குக் கொடுக்கவேண்டும். ஏனென்றால், 'சிசு பாடசாலைகளில் (5 முதல் 7 வயது வரை) பெற வேண்டிய எண்ணறிவும் எண்களைக்கொண்டு கணக்கிடும் திறமையும் மனவளர்ச்சியின் காரணமாய் ஏற்படுகின்றன; இவ்வளர்ச்சி போதனை காரணமாயல்லாமல், பெரும்பாலும் அது தடைசெய்துங்கூட உண்டாகிறது' என்று மிஸ் ட்டிரமண்டு அம்மையார் கூறுகின்றார்கள்.

(தொடரும்.)

---

## விடுகவிகள்—இது என்ன?

1. ஆள் இறங்கமுடியாத கிணற்றில் ஒரு மயில் இறங்கி ஆடுகிறது. (M. Devaraj.)

2. சின்னவீடு நிறைய சிறுய்கள்.

(A. Arulanandam, Vannampatti.)

3. மண்ணுக்குள்ளிருக்கும் மாயாண்டி, உரிக்க உரிக்கத் தோலாண்டி. (S. Antony Viagappan, Punnavanam.)

4. (a) சென்னெல் வளர்ந்தோங்கும் சிவநாராயணன் தோப்பில் என்ன பழம் பழுத்ததுகாண்! அது ஒரு முந்திரி முந்திரி; ஒரே முந்திரி அறுமுந்திரி, முந்திரி. அதுதான்.

(b) கால்காணி மீதிருந்து, காகம் பறந்துவந்து நால்காணி மீது இருந்த நியாயமென்ன?

(V. Krishnaswamy Aiyar, Tr., Kuthur, Lalgudi.)

# சிறு கதை

## தாத்தா எலி

### (G. Maria Victor)

ஒரு குடியானவனுடைய வீட்டில் எலிகள் ஏராளமாக இருந்தன. தவச தானியங்களையும், துணிமணிகளையும், சேதப்படுத்திக்கொண்டு வந்தன. குடியானவன், எலிகள் செய்யும் அட்டகாசத்தைப் போக்க பூனை ஒன்றை வளர்த்தான், வீட்டைக் காவல்புரிவதற்கு ஒரு நாய் வளர்த்தான். இவைகள் இரண்டும் சிநேகமாக வாழ்ந்து வந்தன.

பூனை வீட்டிற்கு வந்தது எலிகள் உயிருக்கு ஆபத்து துவக்கினது. எலிகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்தது. இந்த ஆபத்தைத் தடுக்க அவ்வீட்டிலுள்ள எலிகளெல்லாங் கூட்டங்கூடின. ஒவ்வொரு எலியும் வெவ்வேறு யோசனைகள் சொன்னது. இவற்றையெல்லாம் ஒரு மூலையில் குந்திக்கொண்டிருந்த கிழ எலி கேட்டுக்கொண்டிருந்தது. கடைசியாய் எழுந்து நின்றது. மற்றவை, என்ன சொல்லப்போகுதோ என்று தங்கள் காதுகளை உயர்த்திக்கொண்டு கவனித்தன.

என் அன்புள்ள சிறுவர்களே, நீங்கள் சொல்லும் யோசனை பொருத்தமானதாயிருந்தாலும் செய்யக்கூடியதல்ல. என்னுடைய தந்திரமோ மிக மிகப் பொருத்தமானது. இதன்படி செய்தால் நம்முடைய கெட்டகாலம் முடிந்துவிடும். பயமில்லாமல் நம் குழந்தை குட்டிகளுடன் வெகுகாலம் இவ்வீட்டில் சுகமாகக் காலங் கழிக்கலாம். நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நான் துவக்குங் காரியம் எப்பொழுதும் தோல்வியடைந்ததில்லை. எனது வெற்றிக்காக கடவுளைக் கும்பிடுங்கள் என்றது.

கூட்டத்திலுள்ள ஒரு சுண்டெலி, எலித்தாத்தா உங்கள் யோசனையைச் சொல்லுங்களேன் பர்க்கலாம். கட்டாயஞ் சொல்லவேண்டுமென்றால் சொல்லுகிறேன். நம் விரோதி பூனையும், வீட்டுக்காவல்கார நாயும் சிநேகமாக இருக்கின்றன. அந்த நாய் மூலமாகத்தான் நமக்கு சுயராஜ்யங் கிடைக்கும். பூனைமேல் நாய்க்கு கோபமுண்டாக்கி கொல்லும்படி செய்யவேண்டும். இதுதான் என் யோசனை. எல்லா எலிகளும் சபாஷ் சபாஷ் என்று கைகொட்டின.

மறுநாள் காலை, தாத்தா எலி மிகுந்த அடக்க ஒடுக்கத்துடனும், மரியாதையுடனும், சங்கிலியால் கட்டுண்டிருந்த நாயினிடம் போனது. எலி நாயைப் பார்த்து, நாய் மாமா என்னை நீங்கள் கொல்லக்கூடாது. உங்கள் சுகத்தை எண்ணியே நான் வந்திருக்கிறேன். அப்படியானால் நீ என் பக்கத்தில் வந்து பேசலாம், பயப்படாதே. மாமா, உங்கள் சிநேகிதன், ஒரு மோசக்காரன். அவன் மகா துஷ்டன். பேராசைக்காரன். நயவஞ்சகன். உங்களுக்கு எஜமான் வைத்திருக்கும் நல்ல பதார்த்தங்களையெம்லாம் அவன் தின்றுவிடுகிறான். உங்களுக்கு எலும்புமாத்திரந்தான் கிடைக்கிறது என்றது. உடனே நாய்க்கு

அடங்காக் கோபமுண்டானது. பல்லை நெறுநெறென்று கடித்தது. நான் அவனை ஒருகை பார்த்துக்கொள்கிறேன், நீ போ என்று சொல்லியும் சொல்லாமலிருக்குஞ் சமயத்தில், அங்கு வந்த பூனை எலியின் மேல் பாய்ந்தது. உடனே நாய் பூனையைக் கடித்துக்கொன்று தன் கோபத்தைப் போக்கினது.

எலி தப்பிப் பிழைத்தது தம்பிரான் செயல் என்று நினைத்து, தன் கூட்டாளிகளிடம் சகலத்தையும் சொன்னது. அவைகள் தாத்தா எலிக்கு ஜே! ஜே! என்று ஆர்ப்பாட்டஞ் செய்து சந்தோஷித்தன.

---

## ஜீவராசிகளின் பாஷைகள்

(கொத்து 34, மலர் 7, பக்கம் 113-ன் தொடர்ச்சி.)

மேலும் சிலர் பிராணிகளால் நினைப்பதற்காவது, பேசுவதற்காவது முடியாதென்கின்றனர். மிருக ஜாதியுடன் நெருங்கி பழகியிருந்தால் அவர்கள் அத்தகைய முடிவுக்கு வந்து இருக்கமாட்டார்கள். தன் வயிறு நிறைந்து இருக்கும்பொழுது நாய்க்கு ஒரு நல்ல எலும்பைப் போட்டால், தின்னமல் ஒரு குழியில் வைத்து பத்திரமாய் மூடி வைக்கும். அவ்விதம் பத்திரப்படுத்துவதை யாரும் கண்டுவிட்டால், அதைத் தோண்டியெடுத்து வேறு இடத்தில் யாருக்கும் தெரியாமல் புதைத்துவைக்கும். மறுநாள் தோண்டி எடுத்துத் தின்னும். தன் மலத்தை யாரும் பார்க்கக்கூடாதென்று பூனை மண்ணல் மூடிவைப்பதை என்னவென்று சொல்வது. மாடுகள் தாங்கள் போட்ட சாணத்தில் மண்ணைத் தள்ளுவதை யார்தான் பார்க்காது இருக்கமுடியும். இக்காரியங்கள் பிராணிகளின் நினைப்பினுல் ஆனதல்லவென்று சொல்லக்கூடுமா? நினைவு இருக்கும் இடத்தில் பேச்சு உண்டு என்பதைப் போல் பிராணிகளிடத்தும் நினைவு இருக்கும்பொழுது பேச்சு இருந்து தானே ஆகவேண்டும். சமயத்துக்கு ஏற்றவாறு காகம், குருவி இடும் சப்தம் பேச்சு அல்லவென்று எப்படி சொல்லக்கூடும்? காகங்கள் கூட்டம் கூடி இறந்தவர்களுக்காக அனுதாபப்படுவதையும், குற்றம் செய்தவர்களைத் தண்டிக்க பஞ்சாயத்துப்போட்டு தீர்ப்புச் செய்வதையும் பார்த்திராதவர்கள் யார் இருக்கமுடியும்? அவ்விதம் பேசும் திறமையோ, கருத்தை வெளியிடும் தன்மையோ, நினைப்போ இல்லையெனின் அவைகளின் கூட்டத்தின் காரணம்தான் என்ன? கூட்டத்தின் தீர்மானப்படி ஒரு காகத்தை சகல காகங்களும் கூடி அலகினுல் கொத்திக்கொல்வதின் அர்த்தம்தான்என்ன? பசு, நாய் முதலியன தங்கள் வருத்தத்தைக் காட்ட கூவிஓலமிடுவதையும், சந்தோஷத்தை வெளியிட க்னைத்துக் குதிப்பதையும் பார்த்திருக்கிறோம். எறும்புகள் கொள்ளையிட்ட நெய் பாத்திரத்தைத் தட்டி எறும்பைப் போக்கி பத்திரமாய் உரியில் வைத்தாலும், பாத்திரத்தில் தங்கியிருந்த ஒரு எறும்பின் உதவியால் மறுநாளைக்குள்

பல்லாயிர எறும்புகளால், நெய் காலியாவதை யார்தான் அறியாது இருக்கிறார்கள்? இவ்விதம் ஆராய்ச்சி செய்துகொண்டே போனால் கட்டுரையும் பெருகும்.

சிறிதாகட்டும் பெரிதாகட்டும் எந்த ஜந்துவுக்கும் பேசும் திறமை அடியோடு இல்லை என்று மறுத்து உரைக்க எவராலும் முடியாது. பிடிவாதமின்றி மூன்றும் உணர்ந்த ஞானி இவ்வுலகத்தை பரிசோதித்துப் பார்க்கின் கருணை கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட எல்லா ஜீவ ராசிகளும் சுக துக்கங்களை அனுபவிப்பதுமின்றி, தங்கள் தங்கள் சுகம், துக்கம், ஆசை, எண்ணம், விருப்பு, வெறுப்பு இவைகளை வெளியிடும் ஆற்றல் உடையன என்பதை நிஷ்களங்கமாய் அறியலாம். ஜீவராசிகளின் பேசும் தன்மையும், ஆலோசனைத்திறனும், தங்கள் கருத்துக்களை வெளியிடும் ஆற்றலும் "பழத்துக்கு தக்கது சார்" என்பதைப் போல், ஒவ்வொன்றின் தன்மைக்குத் தக்கபடி பெற்று இருக்கின்றன. ஜீவராசிகள் பேசுகின்றன; கருத்துக்களை வெளியிடுகின்றன; சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நடக்கின்றன.

---

## பெருந்தகை பாபர்

### (By S. Gopalakrishnan, Jayankondam)

(டில்லி கடைவீதி; சுல்தான் இப்ராஹிம் லோடி படையைச்சேர்ந்த ஓர் வீரன்; பானிபட்டு சண்டை தோல்விக்குப்பின் படைத்தொழிலை விட்டுவிட்டு ஒரு தொழிலுமின்றி, தன் மகன் 5 வயதுள்ள சிறுவனுடன் கடைவீதிக்கு சாமான்கள் வாங்க வருதல்.)

**ஆஸவ்கான்:**—கண்ணே! கையைப் பிடித்துக்கொண்டு வா. கூட்டத்தில் எங்காவது வழிதப்பிப் போய்விடுவாய்.

**சிறுவன்:**—ஆகட்டும் அப்பா. எனக்கு இன்னிக்கு கட்டாயம் துப்பாக்கி வாங்கித்தரவேணும்.

**ஆஸவ்.:**—துப்பாக்கி எதுக்குடா செல்வமே! துப்பாக்கியைத் தூக்கக்கூட உன்னால் முடியாதே!

**சிறுவன்:**—போ அப்பா. துப்பாக்கிகொண்டு சுடக்கூடத் தெரியுமே.

**ஆஸவ்.:**—துப்பாக்கியாலே சுடணும்னு யாரடா சொல்லிக் கொடுத்தா?

**சிறுவன்:**—புது ராஜா துப்பாக்கிகொண்டுதான் நம்ம யானைப் படையை ஜெயிச்சாருன்னு நீங்க சொல்லல்லே. துப்பாக்கி இருந்தா யானையைக்கூட அடக்கலாம்.

**ஆஸவ்.:**—(கலவரத்துடன்) ஆமா ஆமா! உஸ் அதைப்பற்றி இப்போ பேசக்கூடாது: துப்பாக்கிதானே வேணும் இதோ வாங்கித் தரேன்; சும்மா இரு.

(பாபர் ஒட்டக வியாபாரிபோல வேஷம்பூண்டு ஆஸவ்கானிடம் நெருங்குதல்.)

**வியாபாரி :**—ஐயா! சலாம் மஹாராஜ்! இந்த ஊரில் விடுதி எங்கிருக்கிறது? சொல்லுங்கள் பாபுஜி!

**ஆஸவ் :**—அதோ அந்தப் பெரிய கட்டிடம்தான். (காட்டுதல்) நீ யார் எந்த தேசத்தான்?

**வியாபாரி :**—நான் கண்டஹார்வாசிங்க, ஒட்டக வியாபாரம் செய்கிறேனுங்க.

**ஆஸவ். :**—கண்டஹாரா! அப்படின்னு உங்க ஊர் ஆள்தான் இங்கே பாதுஷாவாக இருக்காரு தெரியுமோல்லியோ?

**வியாபாரி :**—யாரோ சொன்னுங்க; நான் நம்பலேங்க; ரொம்ப சந்தோஷமுங்க; பெருமை கூடத்தானுங்க.

**ஆஸவ். :**—என்ன பெருமை வேண்டிகிடக்கு. என்னமோ துப்பாக்கி கொண்டுவந்து டப்டிப்னு சுட்டு யானையெல்லாம் கலக்கி எங்க யானைகளை எங்களை கொல்லச் செய்திட்டாரு. துப்பாக்கி இல்லேன்னு தெரியும் அவர் பாடு.

**வியாபாரி :**—என்ன பாபு நீங்க லக்ஷம் பேர்னுவந்து எங்க பன்னிரண்டாயிரம் பேரை எதிர்த்தேங்க. எங்க ஆட்களெல்லாம் பட்டினி பசி, வியாதி இதெல்லாம் அடிபட்டு வந்தாங்களே அதை யோசிச்சு பாருங்க யாரு வீரங்க என்னு.

**ஆஸவ். :**—(கோபத்துடன்) ஆளுக்கு ஆள் யுத்தம் செய்யணும். தர்ம யுத்தம்னு அது தானே! துப்பாக்கி குண்டு இதெல்லாம் கூடாது. அப்போ தெரியும் யார் வீரங்க என்னு.

(மதம்பிடித்த யானை வாரியடித்துக்கொண்டு வருதல். தந்தையும் மகனும் வியாபாரியும் பிரிந்துபோனதால் மகனை யானைத் தன் காலால் தேய்க்கும் சமயத்தில் வியாபாரி இமைப்பொழுதில் பாய்ந்து சிறுவனை தூக்கி அப்பாற் சென்று உயிர்காத்தல்.)

**ஆஸவ். :**—(தன் மகனை வியாபாரி பிழைப்பித்ததற்கு முகத்தில் நன்றிதோன்ற) என் குழந்தையைக் காத்தீர். என் உயிரைக்காத்தீர்—என் குலத்தைக் காத்தீர்—மஹாநுபாவ! உமக்கு நான் என்றென்றும் கடமைபட்டவன். தாயில்லா என் சிறுவனுக்கு தாயும் தெய்வமும் நீரே! இதோ என் அற்ப நன்றியின் அடையாளமாக இம்மோதிரம் பெற்றுக்கொள்ளவேணும். (சிறுவனும் வணங்குதல்.)

**வியாபாரி :**—கூடும் கூட்டத்திலிருந்து சீக்கிரம் வெளியேற மோதிரத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.

**வியாபாரி :**—(தனியே தனக்குள்) சரி; இம்மோதிரத்தில் இவன் பெயர் குறித்திருக்கிறது. சரி; இன்னும் இவ்வீரனை சோதித்து வேடிக்கை பார்ப்போம்.

## ஸீன் 2

பாபர் கொலுகொண்டிருத்தல், ஆஸ்வ்கானையும் சிறுவனையும் விலங்கிட்டு கொண்டுவந்து நிறுத்தல்.

**பாபர் :**—டே! அதமா? நேற்று கடைவீதியில் பகிரங்கமாக நம் வெற்றியை பழித்த உன் நாவை ஏன் துண்டிக்கலாகாது?

ஆஸ்வ். :—அரசே! நான் பழிக்கவில்லை. யுத்தத்தின் நீதியை வாதித்துக்கொண்டிருந்தேன். வேறொன்றுமில்லை.

பாபர் :—யுத்த நீதியைப்பற்றிப் பேச உனக்கு என்ன யோக்கியதையிருக்கிறது சொல்.

ஆஸ்வ் :—மன்ன! நான் தங்களுக்கு எதிராக பானிபட் யுத்தத்தில் சண்டை செய்தவன். உபதலைவன் துப்பாக்கி பிரயோகிக்காவிட்டால் தங்களுக்கு ஜெயம் கிட்டிராது என சொன்னது உண்மை. இதை பழித்தலாகக் கூறவில்லை.

பாபர் :—யாரிடம் கூறினீர்? தெரியுமா?

ஆஸ்வ். :—ஓர் வியாபாரியிடம்.

பாபர் :—இப்பொழுதுதான் நீர் செய்த பெருங்குற்றம் வெளிவரப்போகிறது. சரி! நீர் அவனுக்கு மோதிரம் கொடுத்து நம்மை சதிசெய்துகொல்ல இலஞ்சம் கொடுக்கவில்லையா?

(சபையினர் பிரமித்தல்)

ஆஸ்வ். :—(கோபத்துடன்) சதி என்னும் சொல் எனக்கு மிக புதிது. இன்றே தங்கள் வாயால் என் காதில் விழ துர்ப்பாக்கியம் பெற்றேன். என் குலத்தாரும் எந்நாட்டாரும் சதி செய்தறியார். இதுவும் ஓர் இறக்குமதிப் பொருளாக தங்கள் படையுடன் வந்தது போலும்!

பாபர் :—இதோ இம்மோதிரத்தைப் பார்த்துவிட்டு பிறகு பேசும். இது உம்முடையதா அல்லவா? கூறும். (மோதிரத்தை அவனிடம் எறிதல்.)

ஆஸ்வ். :—ஆம் இம்மோதிரம் என்னுடையதே.

(சபையினர் ருசுவுடன் அரசர் குற்றவாளியை கண்டுபிடித்ததற்கு ஆர்ப்பரித்தல்.)

ஆஸ்வ். :—(மேலும் தொடர்ந்து) ஆனால் இம்மோதிரம் சதி செய்வதற்கு ஊழியமாகவோ இலஞ்சமாகவோ கொடுக்கப்பட்டதல்ல. என் மகன் இதோ இப்பாலனை மதயானையினின்று காப்பாற்றியதற்காக அளிக்கப்பட்ட அன்பிற்கு சிறு நன்றி.

சிறுவன் :—அப்பா! அப்பா!! நேற்று என்னை காப்பாற்றியவர் வேறொருவருமில்லை. அப்பா இதோ இருப்பவர்தான் அப்பா. (பாபரை சுட்டுகாட்டுதல்.)

ஆஸ்வ். :—(கூர்ந்து கவனித்து) பின் வணங்கி: அண்ணலே இவ்வேழைக்கு மன்னிப்பு அளிக்கவேண்டும். என் புன்மொழியை மன்னிக்கவேண்டும்.

பாபர் :—வீர! உன் உண்மையும், வீரமும் பாராட்டுதற்குரியன. என் சோதனையில் நீ வெற்றிபெற்றாய். விசுவாசமுள்ள வீரர்களே பெறற்கரிய இரத்தினங்கள் இன்றுமுதல் நீர் நம் படைக்கு தலைவனாக அமர்ந்து பணியாற்றுக.

(தந்தையும் தநயனும் பணிதல்.)

**சிறுவன்** :—அப்பா எனக்கு அப்போ நிறைய துப்பாக்கி கிடைக்கும்னு சொல்லு. (சந்தோஷித்தல்) எல்லோரும் " பாபருக்கு ஜே" என வாழ்த்துதல். (திரை.)

189990 600 008

---

## தேனீ வளர்த்தல்

(கொத்து 34, மலர் 7, பக்கம் 114-ன் தொடர்ச்சி)

(S. Marimuthu)

பொந்திலுள்ள அடைகளை எல்லாம் எடுத்தபிறகும் ராணீ கிடைக்காமல் இருப்பதும் உண்டு. உள்ளே இருக்கும் அடைகளை எல்லாம் விட்டு விட்டு, இன்னும் உள்ளே ராணீ சென்றிருக்கும். அப்பொழுது நாம் எடுத்துச்சென்றுள்ள பந்தத்தில் நெருப்பு மூட்டி, புகையைக் கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே செலுத்தினால் ஈக்கள் எல்லாம் வெளியே வந்துவிடும். அப்பொழுது ராணீயும் வெளியே வரும். ராணீ வெளியே வந்ததும் தேன் கூட்டிற்குப் பக்கத்திலேயே உள்ள ஏதாவது ஒரு மரத்தில் போய் ஒட்டிக்கொள்ளும். அப்பொழுது எல்லா ஈக்களும் மரத்திலேயே போய் ஒட்டும். நாம் எடுத்துச் சென்றுள்ள தலையணை உறையை விரித்துத் தொங்கும் கூட்டிற்குள் நுழைத்து எல்லா ஈக்களும் உறைக்குள் சென்றபிறகு உறையை மூடிக்கொண்டு வந்து நமது தேனீப்பெட்டியினுள் திறந்துவிட்டால் எல்லா ஈக்களும் ராணீயுடன் பெட்டியினுள் சென்றுவிடும். உறைக்குப் பதிலாக தொங்கும் கூட்டத்தின்மேல் பெட்டியையே தூக்கிப்பிடித்து எல்லா ஈக்களும் சென்றபிறகு பெட்டியை மூடிவிட்டாலும் விடலாம். இவ்வித முறைகளில் தேனீக்களைப் பிடித்து நமது இருப்பிடத்திற்குக் கொண்டுபோகலாம்.

சில சமயங்களில் நாம் வளர்க்கும் தேனீப்பெட்டியினுள் புழுக்கள் விழுந்து அடைகளைக் கெடுத்துவிடும். அப்பொழுது ஈக்கள் எல்லாம் வேறிடத்திற்கு ஓடிச்சென்றுவிடும். அவ்விதம் ஓடாமல் இருக்க வாரத்திற்கு ஒருமுறையாவது கூட்டைத் திறந்து சுத்தம் செய்து அடைகளை கவனித்து வரவேண்டும். மஞ்சள் குளவி என்னும் பூச்சி காலை, மாலை நேரங்களில் கூட்டின் தலைவாசலில் உட்கார்ந்து தேனீக்களை சாப்பிட்டுவிடும், அதையும் அடிக்கடி கவனிக்கவேண்டும்.

இரண்டு மூன்று மாதங்கள் சென்றபிறகு மேலறையில் வைத்திருக்கும் தேனை, தேன் எடுக்கும் கருவியின் மூலமாகத் தேனை எடுத்துவிட்டு, மறுபடியும் அடையை அப்படியே வைத்துவிட வேண்டும். இவ்விதமாக அடிக்கடி தேனை எடுக்கலாம். நாம் நமது இருப்பிடத்தில் 10 அல்லது 15 கூடு வைத்து வளர்த்தால், நமக்கு வேண்டிய தேனை நாமே எடுத்துக்கொள்ளலாம். எடுத்துள்ள தேனை விற்று அதிக லாபத்தையும் அடையலாம்.

---

# நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

15—1—'44-ல் நம் பாடசாலை போர்டிங் மாணவர்கள் இந் நகரின் சமீப தூரத்தில் இருக்கும் கொள்ளிட நதிக்கரைக்கு வன போஜன உல்லாசப் பிரயாணம் சென்றனர். ஆற்றில் புனலாடி வனபோஜனம் அருந்தி வனக் காட்சிகளைக் கண்டுகளித்து மாலை பாட சாலைக்குத் திரும்பி இன்புற்றனர்.

17—1—'44 18—1—'44 ஆகிய இவ்விரண்டு நாட்கள் புதுக் கோட்டையில் கழிந்தன. ஏற்கனவே திட்டம் செய்திருந்தபடி நம் பாடசாலை எல்லா மாணவர்களும் ஆசிரியர்களும் ஷை புதுக்கோட் டைக்கு உல்லாசப் பிரயாணம் செய்துவர ஏற்பாடுகள் செய்யப்பட் டிருந்தன. விவரம் அத்தலைப்பின் அடியிற்காண்க:—

27—1—'44 மேன்மைதங்கிய சென்னைமாகாண கவர்னர் திருச் சிக்கு விஜயம் செய்திருந்தபோது நமது பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் அன்று மாலை திருச்சி நகர மண்டபத்தில் நடைபெற்ற அவரது பிரசங்கத்தைக் கேட்கச் சென்றனர்.

30—1—'44-ல் நம்மாதிரிப் பாடசாலைச் சிறுவர் திருச்சி ரேடி யோவில் "சிறுவர் பகுதியில்" ஈடுபட்டு, சம்பாஷணை நடத்தினர். இது போற்றத்தக்கதாக இருந்தது. ரேடியோ அதனை ஒலிபரப்பியது.

## உல்லாசப் பிரயாணம்

(I. S. Xavier F'edez)

ஜனவரி மாதம் 17-ம் தேதி மாலை 5½-மணிக்கு புதுக்கோட் டைக்குப் புறப்பட்ட வண்டியில், குதூகலமாகப் பாடல்கள் கிளம்பி விட்டன. எங்கள் கும்பல்களுக்கு மத்தியிலிருந்த சிலர் கோஷ்டி யராய் குஷியாகப் பாடிக்கொண்டு எங்கு செல்கிறீர்?" என்று வினவ; நாங்கள் புதுக்கோட்டை ஸ்ரீ பிரஹதீஸ்வரராஜ்ஜின் பட் டாபிஷேகம்; அவ்வைபவத்தைக் கண்டுகளிக்கச் செல்கிறோம் என்று பதில் கூறினோம். பலரும் தங்களுக்குள் புதுக்கோட்டை சமஸ் தானத்தைப்பற்றிப் பலப்பல பேசிக்கொண்டும், சிலர் அரண்மனைக்கு வேறு எதும் ஈடில்லை என்றும்; சிலர் அங்குள்ள கண்காட்சிசாலை யைத் தரிசித்தால்மாத்திரம்போதும் என்றும் தர்க்கித்தனர். எனி னும் பாடல்கள் நின்றபாடில்லை. போகும் வழியில், மன்னனை வணங் குவபோன்று பொன்னிறக் கதிர்கள் தலைசாய்ந்து நின்றன. தழை களும், கொடிகளும் எங்களை வரவேற்பபோன்று அசைந்தன.

வண்டி புதுக்கோட்டை இரயில்வே ஸ்டேஷன் அடைந்து விட்டது என்றதும், கீழிரங்கி, நகரைநோக்கி நடந்தோம். விண்மீன் கள் எல்லாம் மண்மீது பூத்ததோ என மின்ஒளி விளக்கு துள்ளின. இரவில் நகரின் அழகிய வீதிகளைக் கடந்து, உண்டதும், பள்ளிக்கூடம்

ஒன்றில் துயின்றோம். காலையில் சாப்பாட்டு விடுதிகளில் புகுந்து, உணவு அருந்தியதும், நகரின் தோற்றத்தைப் பார்த்தோம்.

அகன்று நீண்ட அழகிய வீதிகள் கோணுது திகழ்ந்தன. தெருக்கள் வெகு சுத்தமாகவும், இருமருங்கும் மரங்கள் செறிந்து, குளிர் நிழல் தருகின்றன. வீடுகள் அழகியனவே; வீடுகள் அதிக நெருக்கமின்றி போதிய இடவசதியுடையதாய் அமைக்கப்பட்டுள்ளன. நகரின் பக்கம் ஆறுகள் யாதும் இல்லையெனினும், குளத்திலிருந்து போதிய நீர் குழாய்கள்மூலம் எங்கும் விநியோகம் செய்யப்படுகிறது. குளங்கள் காவல் காக்கப்படுகின்றன. நகரின் மத்தியில் நந்தவனம் இரண்டு உண்டு. மிக அழகியது. ஒன்றில் பலவகைத் தாமரை மலர்ந்து இனிய காட்சியளித்தது. புள்ளினம் பாடின. துள்ளிய மானினம் கொள்ளைகொண்டது. அங்கு அரண்மனை இரண்டு உண்டு. அதில் நிர்வாகம் நடத்த, மன்னன் கொலுவீற்றிருப்பது புதிய அரண்மனை. அங்கு நீதி மன்றம், பெரிய கட்டிடமாகும். எவர்க்கும் இலவசமாக மருந்துகொடுக்க ஆஸ்பத்திரிகள் உள.

பொருட்காட்சிசாலை ஒன்று தலைசிறந்ததாய் விளங்குகிறது. அது நமது மாகாணத்தில் குறிப்பிட்டுச் சொல்லும் காட்சி நிலையங்களில் ஒன்று. பூர்வீக சரித்திர சம்பந்தமான கல் வெட்டுக்கள்; மண்பாண்டங்கள்; பிணம் புதைக்கும் தாழிகள், சிலைகள், ஆயுதம், பலவகையான கருவிகள், கவசம் மிகப் பயன்தரக்கூடியவை. எண்ணிறந்த பறவை வகைகள், பிராணிகள், மீன்கள், சிப்பி சங்குகள், தாதுப் பொருட்கள், அதிசயப் பிறப்புடைய ஜெந்துக்கள் வியப்பளிக்கும் தன்மைய. நம் நாட்டில் செய்த கைத்திறன் அமைந்த நுட்பமான பொருள்கள், பார்ப்பவருக்குச் செருக்கு ஏற்படுத்தும் விசித்திரமுடையன. இவற்றை எல்லாம் விரிக்கிற்பெருகும்.

18-ம் தேதி இரவு 6-மணிக்கு ராஜ வீதிகள் தோரணங்களால் இந்திரன் நகரென விளங்கிற்று. எண்ணிறந்த பலவர்ண மின்ஒளிகள் பிரகாசித்தன. கமுகு வாழை அணியணியாய்த் தோன்றியது. ஜனக்கும்பல் பலநிற நீர் நிறைந்த கடல் எனத் தோன்றியது. மன்னர் பரிபூட்டிய ரதமிசை எழுந்து பவனிவந்தார். கட்டியக்காரார் வாழ்த்தவும்; வள்ளுவர் வருகைகூறி, யானை மீதிருந்து பறை கூறவும், நாட்டு வாத்தியம் பல ஒலிக்கவும் செய்தன. சங்கு ஆர்த்தன. குதிரைப்படை ஒன்று முன்சென்றது. மெய்க்காப்பாளர் புடைசூழ, மன்னன் பீதாம்பரமணிந்து நவமணியார் முடி புனைந்து உதயமானார். மலரும் சுண்ணமும் வீதி நிறைந்தன.

“ ஆர்த்தனர்; களித்தனர் ஆடிப்பாடினர்
வேர்த்தனர், தடித்தனர், சிலிர்த்து மெய்மயிர்
போர்த்தனர் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர்
தூர்த்தனர் நீழ் நிதி சொல்லினுர்க்கெல்லாம்.” என்ற

கம்பன் கூற்று பொருந்தப் பொலிந்தது. விருதும் குடைகளும் பல

முகிழ்த்தன. பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், தத்தம் வாகனங் களில் அணியாய் வந்தனர். பவனி, முன் நமது நாட்டில் நடப்பவற் றைத் தழுவியும், காலத்திற்கேற்பச் சில நவீனமானவற்றைக்கொண் டும் நடந்தது. கண்டு மகிழ்ந்த யாங்கள் மறுநாட் காலை எம் பாடசா லைக்குத் திரும்ப, ரயில்வேஸ்டேஷனுக்கு வந்து வண்டியில் ஏறினோம். ரயில்விட்டு இறங்கிய எம்முடன் புதுக்கோட்டை நினைவுகள் பின் தொடர்ந்தன.

---

## பெற்றோர் சங்கங்கள்

22—11—43-ல் நாட்டரசன் கோட்டை—செங்குளிர்பட்டி S. M. E. பாடசாலை பெ. ச. முதல் ஆண்டு விழா, ஷை ரேஞ்சு ஸீனியர் டெப்யூடி-இன்ஸ்பெக்டர் ஸ்ரீ K. S. பாலநேத்ரம், B.A., L.T. அவர்கள் ஜூனியர் டெ. இ. ஸ்ரீ G. கந்தசாமி செட்டியார் அவர்கள் இன்னும் பல உத்தியோகஸ்தர்கள், ஆசிரியர் முதலியோர் குழுமியிருக்க, Sri S. வடிவேலு பிள்ளை, B.A., L.T. (Asst. D. E. O. Ramnad) அவர்கள் அக்கிராஸனம் வகிக்க ஷை விழா இனிது நிறை வேறியது. அவ்வமயம் ஷை உத்தியோகஸ்தர்களால் கல்வி விஷய மான அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. பந்தய விளை யாடல்களில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கியபின் ஷை பாடசாலை மாணவர்களால் "மதிபாலன்" எனும் ஓர்இனிய நாடகம் நடத்திக்காட்டப்பட்டது. அனைவரும் இன்புற்றனர்.

இங்ஙனம்,

A. ராயப்பன், (H. M.)

4—12—43-ல் கிழச் சேவல்பட்டி (இராமனுதபுரம்) ஆசிரியர் சங்க ஆண்டுவிழா திருப்பத்தூர் ரேஞ்சு டெ. இன். ஸ்ரீ A. ராமசாமி அய்யர், B.A., L.T. அவர்களது தலைமையின்கீழ் சிறப்பாய் நடை பெற்றது. அவ்வமயம் பண்டித திரு. வ. மு. ரத்தினேஸ்வர அய்யர் அவர்கள், திரு. M. R. சேதுராமன் செட்டியாரவர்கள் ஆகியோர் முறையே, ஆசிரியரும், மாணவரும், தமிழ்ச்சுவை இப்பொருள்களை ஆராய்ந்து சொற்பொழிவு நிகழ்த்தினர். மாணவர்களால் ஆடல் பாடல்கள் நடத்திக்காட்டப்பட்டன. தலைவரவர்களது முடிவுரை யுடன் ஷை வைபவம் இனிது நிறைவெய்தியது.

A. Ratnam, Secretary.

26—12—43-ல் காளிப்பட்டி ஜனோபகார பாடசாலை முதல் ஆண்டு நிறைவிழா, திருச்சி ஜில்லா கல்வி அதிகாரி திரு. S. முருகேச முதலியார், B.A., L.T. அவர்களது தலைமையின்கீழ் வெகு விமரிசை யுடன் நடந்தேறியது. முசிரி ரேஞ்சு ஸீனியர் டெ. இன். அவர்கள் "பெற்றோர் கடமை" என்னும் விஷயத்தைப்பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினர். மாணவர்களது ஆடல் பாடல்கள் அனை

வரையும் மகிழ்வித்தன. பரிசளிப்பு முடிந்தவுடன் தலைவருக்கு நன்றி கூறப்பட்டது. கூட்டம் இனிது கலைந்தது.

V. நாராயணசாமி, தலைமை ஆசிரியர்.

7—1—44-ல் உடையார்பாளையம் தாலூகா திருமலவாடி லேபர் பாடசாலையின் பெற்றோர் சங்கக்கூட்டம், ஆசிரியர் திரு. M. வைத்திலிங்கம் அவர்களது தலைமையின்கீழ் கூடிற்று. அவ்வமயம் ஆசிரியர் திரு. சந்தியாகு அவர்கள் சுகாதாரம் பெற்றோர் கடமை என்பதைப்பற்றியும், ஷை லேபர் பாடசாலை ஆசிரியர் திரு. A. சின்னப்பன் அவர்கள் பெண் கல்வியைப்பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். தலைவரது முடிவுரைக்குப்பின் "வள்ளித் திருமணம்" என்னும் நாடகம் மாணவர்களால் நடத்திக்காட்டப் பட்டதுடன் ஷை வைபவம் இனிது முடிவுற்றது.

A. Chinnappan, Teacher.

16—1—44-ல் பெ. தா. பாளையம் கன்னிகாமடம் அர்ச். பிரான்சீஸ்மரி பெண் பாடசாலையில் பெற்றோர் சங்கம் கூட்டம் நடைபெற்றது. பெ. தா. கனம் ஸீனியர் டெ. இன். J. நித்தியானந்தம், B.A., L.T. அவர்களது தலைமையில் நடைப்பெற்றது. இடையில் ஷை பாடாசாலை மாணவி, மாணவர்கள் "உண்மையுள்ள ஏழைச் சிறு பெண்" என்ற ஓர் நாடகத்தை அதிக விமரிசையாக நடத்தினர். பின்னர் தலைவர் "பெண் கல்வி" அவசியம் என்பதை விளக்கினர். வந்தன உபசாரத்துடன் ராஜ வாழ்த்துகூறி கூட்டம் இனிது முடிவு பெற்றது.

Sr. Alexandra Mary,
கன்னிகாமடம், பாளையம்.

---

# V

## யுத்த முயற்சி

### "திருச்சி உயர்தரக் கல்விக்கழகங்களின் நன்கொடை"
### திருச்சி நகராண்மை மன்றத்தில் (Municipal Public Hall)
### ஆடல், பாடல், விமரிசைக் காட்சிகள்

மே. த. சென்னை கவர்னர் அவர்களது யுத்த சகாயநிதிக்குப் பணம் திரட்டும் பணியாற்ற, திருச்சி, உயர்தரக் கலாசாலைகள் எல்லாம்ஒன்று சேர்ந்து தம் கடமைகளை வெகு குதூகலத்துடன் நிறைவேற்றின.

1944-ஆம் ஜனவரி-மீ 19உ மாலை 5-30-மணிக்கு ஷை சபா மண்டபத்தில் மாபெருங்கூட்டம். இத்திருச்சிமா நகர் எல்லா கலாசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் ஏராளமாய்க் குழுமினர். இந்த ஜில்லா கல்வித்தலைவர் (D. E. O.) அவர்களும் ஏனைய கல்வி அதிகாரிகளும் விஜயம் செய்தனர். பொது மக்கள் கூடினர். எங்கும்

உற்சாகம். Captain G. T. B. Harvey (Director of War Publicity, Madras) அவர்களது தலைமையின்கீழ் ஷை வைபவம் ஆரம்பமாயிற்று.

யுத்த சகாய நிதிக்குப் பணந்திரட்டும் நோக்கத்துடன் பற்பல விநோத, ஆடல் பாடல் காட்சிகள் நடத்த தகுந்த ஏற்பாடுகள் வெகுத் திறமையுடன் செய்யப்பட்டிருந்தன. அதற்கேற்ப A. R. P. வேலைத்திறன்களும், சாரணர்களின் (Scout display) அற்புத வேலைகளும் சிறந்து விளங்கின. கண்களைக்கவரும் நடனங்களும் காதுக்கினிய கீதங்களும் சிறுமிகளின் கும்மி, கோலாட்ட வேலைகளும் கண்டோர் மனதைக் கொள்ளைகொண்டன. மாணவ, மாணவிகளின் ஹாஸ்யக் கச்சேரியும், இனிய சிறு நாடகப் பயிற்சிகளும், சம்பாஷணைகளும் அனைவரையும் அகமகிழ்வித்தன. இடைக்கிடையே St. Joseph College Band இன்னிசை முழக்கியது. மற்றும் சில நவீன விசித்திர நடனங்கள் (Dance) முதலிய பற்பல நிகழ்ச்சிகளை விரிக்கின் பெருகும்.

சுருங்கக்கூறின், ஷை வைபவம் வெகுத்திறமையுடனும் முழு வெற்றியுடனும் நிகழ்ந்து அனைவர்க்கும் மிக்க மகிழ்ச்சியையளித்தது. திருச்சிமாநகர் கண்ணுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கைக்கும் நன்மதிப்புக்கும், ஏற்றபடி உற்றதானதோர் பணத்தொகையும் திரட்டப்பட்டு பண முடிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த மகத்தான வெற்றிக்கு முக்கிய காரணமானவர் இந்த ஜில்லா கல்வி அதிகாரி (D. E. O.) ஸ்ரீ S. முருகேச முதலியார், B.A., L.T. அவர்கள்தான் என்றால் மிகையாகாது. அன்னவருடன் ஏனைய கல்வி அதிகாரிகளும், மற்றும் பல தலைவர்களும் ஒத்துழைத்து, திருச்சி நகர் பாடசாலைகளின் கண்ணியத்தை வெளிப்படுத்தி, கௌரவத்தை நிலைநிறுத்திய பான்மை மிகவும் மெச்சத்தக்கதாகும் என்பதில் சந்தேகமில்லை.

கண்டு களித்தோன்,

R. C. Secondary Training School, Trichinopoly.

---

## யோசனைக்கணக்கு விடை

(கொத்து 34, மலர் 7, பக்கம் 110)

**விடை.**—ஜானுக்கு 4 பாகம்; ஜேம்ஸுக்கு 3 பாகம். ஜானுக்கு **28** தேங்காய்கள்; ஜேம்ஸுக்கு **21** தேங்காய்கள். ஷை விடையளித்தவர்கள்: M. Devaraj, Tr. Sengattupatti. M. H. Sam, Tr. Andimadam. B. M. Andrews Sebastian, Tr. Puthur, Trichy. S. Arpudasamy, Tr. V. N. P. School, Puthur, Trichy. N. V. Rengaraju Pillai, V. N. P. School, Puthur, Trichy. S. Antoni Viagappan & V. Seeni Ocha Thevan, R. C. T. School, Trichy.

# பூகோளப் பாட்டு

(சகாரா பாலைவனம்)

(S. S, Arokiasamy, Teacher)

(மழையில்லாச் சீமையில் என்ற மெட்டு)

29 சங்கராபரணம், ஏகதாளம்

## பல்லவி

| | |
|---|---|
| ; த ஸ ஸா ஸா ரீ க ஸ ரி ப மா | கா , ரி ரி ப மா க ம க ரி ரி ஸ ரீ |
| . பா . தை ம ணல் நி றைந்த | கோ . ர . த ணல்மி . குந் . த |
| ; தா ஸா ஸா ரி க ரி க ரி ஸ் தா | ஸா ; ; ; ; ; ; ; |
| . பா லை வ னம் . . . ச . கா | ரா . . . . . . |

## அநுபல்லவி

| | |
|---|---|
| பா,க பா கக ப க ப த ப ம மா | மா ரி ரி மா,ரி ம ரி மப காகா |
| பா.ர் திட சில சுனைகளும் சே.ரும் | பசும்புல் ஈச்சம் தோ.புகள் நேரும் |
| கா ,ஸ கா,ஸ க ரி க ம ரி ரீ | ; தா ஸாஸா ரிக ரிக ரிஸ தா ஸா ; ;; ;; ;; |
| பா.ல ரேஇது ஆப்ரிக்கா பாரும் | . பா லைவ னம் . . சகா : ரா . . . . . . |

(சரணத்தை பல்லவி அநுபல்லவிபோல் பாடவும்)

## சரணங்கள்

1. பார்த்திடச் சில சுனைகளும் சேரும்
பசும்புல் ஈச்சந்தோப்புகள் நேரும்
பாலரே இது ஆப்பிரிக்கா பாரும்—பாறை.

2. கொட்டம் குடிசை ஈச்சங்கூரை மண் வீடுகள்
ஒட்டை குதிரை ஆடுகள்
பட்டிகள் கவனம் வடபுறம் இருந்து
நெட்டையராய் வெண்ணுடை யணிந்து
பெட்வின் அரபியர் பிழைக்குறார் மகிழ்ந்து—பாறை.

3. ஈச்சம்பழச் சிப்பமும் ஈரிழைக்கம்பளமும்
ஏற்றுவார் பாரம் ஒட்டகமேல்
வீச்சு சவுக்கு வெடி தடி கொண்டு
விரட்டியே திருடரை அயல் நாடு சென்று
விலை கூறி சாமான்கள் விற்பனை நன்று—பாறை.

4. சீலமுடன் குருவை பாலர் பணிந்திருந்து
சீராய்ப் படிக்கும் விந்தைகேள்
சித்திரமேவிய புத்தகமெடுத்து
சிறப்புடன் கடைசியின் மேல்வரியடுத்து
செப்பிடுவார் வல இடபுறம் தொடுத்து—பாறை.

---

ஆவணக் காப்பக
சென்னை
189990.

Reg. No. M. 1534

# OUR EMPLOYMENT BUREAU

The **Bodhana Vishaya Poongothu** is being read every month by thousands of Teachers, hundreds of Teachers' Associations in addition to the numerous Pupil-Teachers in the Training Schools, throughout the Tamil-speaking Districts. This is the best medium of its kind for the advertisement of requirements of Schools. Short "Wanted" advertisements will be published on payment of Re. 1/- from Managers who are subscribers and Re. 1-8-0 from non-subscribers. The subscribing Managers shall quote their subscription numbers while placing an order at the concession rate in Our Employment Bureau.

THE EDITOR,
*The Bodhana Vishaya Poongothu,*
TRICHINOPOLY.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.